# கீதா ஸாரம்

ஸ்ரீ உ. வே. வாகம்ருதவர்ஷி வேளுக்குடி வரதாசாரியர்ஸ்வாமி

''ஸர்வோபநிஷதோ காவ: தோக்தா கோபால நந்தந:
பார்த்தோ வத்ஸ: ஸுதீ: போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத்''.

சேயன் அணியன் சிறியன் மிகப்பெரியன்
ஆயன் துவரைக் கோனாய் நின்றமாயன் அன்று
ஓதிய வாக்கதனைக் கல்லார் உலகத்தில்
ஏதிலராம் மெய்ஞ்ஞானமில்.

(1) (2) (3) தத்வவிவேக, (4) நித்யத்யா நித்யத்வ, (5) நியந்த்ருத்வ, (6) ஸௌலப்ய (7) ஸாம்ய, (8) (9) அஹங்கார இந்த்ரிய தோஷபல, (10) மந: ப்ராதந்ய, (11) கரண நியமந, (12) ஸுக்ருதி பேத, (13) தேவாஸுரவிபாக, (14) விபூதியோக, (15] விச்வரூப தர்சந, (16) ஸாங்க பக்தி, (17) (18) ப்ரபத்தித்வை வித்யாதிகளாலே அன்றோதிய கீதாஸமம்" என்று கீதா ஸாரம் பற்பல ப்ரமாணங்களில் உக்தம்.

''அஜாயமாந: பஹுதா விஜாயதே'' என்கிறபடியே கர்ம வச்யனன்றிக்கே க்ருபா பரவசனாய் எம்பெருமான் பல படிகளாக அவதரிக்கிறான் என்பர் நம் பெரியோர். ''அஜாயமாந: பஹுதா'' என்று வேதமும், ''பஹூநிமே ஜந்மாநி'' என்று வேத்யனும், ''சன்மம் பல பல செய்து'' என்று வைதிகாக்ரேஸரரும், ''பகவதவதாரம் அஸங்க்யேயம்''என்றிறே அறுதியிட்டது.

''பகவதவதாரங்களுள், ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம் பரமப்ரதாநம். மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து ...... மாதவனே கண்ணுற நிற்கிலும் காணகில்லா உலோர்க்கு ஒரு சேமவைப்பாக கீதா சாஸ்த்ரத்தை அருளிச்செய்தது ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தின் தனிச் சிறப்பாகும்.

ஸ்ரீ ராமாவதாரத்தில் ''மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம்'', ஸக்ருதேவ ப்ரபந்நாய ...... அபயம் ததாமி'' இத்யாதியான சிற்சில வாக்யங்கள் காணக் கிடைத்தவை யாயினும், பரம வேதாந்த ஸாரார்த்த கர்ப்பிதமானதோர் திவ்ய சாஸ்த்ரமாம் கீதை அவதரித்தது ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்திலே யிறே.

''பாரத: பஞ்சமோவேத: என்றும். ''மஹத்வாத் பாரவத்வாச்ச மஹா பாரதம் உச்யதே'' என்றும், ''கோஹ்யந்யோ புவி மைத்ரேய மஹா பாரத க்ருத்பவேத்'' என்றும், விஷய கௌரவத்தாலும், ப்ரபந்த கௌரவத்தாலும் வக்த்ரு கௌரவத்தாலும் பரம ப்ரமாணமாகும் பாரதம். ஸ்ரீவேதவ்யாச[பகவான் ஸம்ஸாரிகளுக்குக் கொடுத்த மஹா பாரதம் ஸம்ஸார விமோசகமிறே—வங்கக் கடல் கடைந்து அமரர்க்கு அமுதீந்தான் ஆயர் கொழுந்து. அது பந்தமாயிற்று.

''ஸம்யக் ந்யாய கலாபேந மஹதா
பாரதேந ச |
உபப்ருஹ்மித வேதாய நமோ வ்யாஸாய
விஷ்ணவே !!

என்று அருளிச்செய்தார் ச்ருத ப்ரகாசிகா பட்டர். இப்படியாயிறே ஸ்ரீமத் மஹா பாரத வைபவமிருப்பது. அம் மஹா பாரதமே, கோது, அஸாரம் என்னும்படியாய்த்து ஸ்ரீ கீதை.

தஷுடவேபேளருவும் ஸூக்தம் தர்ம சாஸ்த்ரேஷு மாருவம் |
பாரதே பகவத் கீதா புராணேஷு ச வைஷ்ணவம்||

என்னக் கடவதிறே.

"கீதாஸு கீதா கர்த்தவ்யா கிமந்யை: சாஸ்த்ர ஸங்க்ரஹ:
யாஸ்வயம் பத்மநாபஸ்ய முகபத்மாத் விநிஸ் ஸ்ருதா"

என்றித்யாதிகளிலே கீதா வைபவம் ஸுப்ரஸித்தம்.

நாராயணாவதாரமான ஸ்ரீ வ்யாஸர் தம்முடைய சாரீரகத்தில் "ஸ்ம்ருதே: ச" (1·2·6) என்றும்- "ஸ்மரந்தி ச" (4.1.10) என்றும் கீதையை ஸம்வாதி ப்ரமாணமாகக் காட்டியருளினாரிறே.

"பார்த்தம் ப்ரபந்நம் உத்திச்ய சாஸ்த்ராவதரணம் க்ருதம்" என்று கீதார்த்த ஸங்க்ரஹத்தில் ஆளவந்தார் அருளிச்செய்தார். "உத்திச்ய" என்றது "வ்யாஜீ க்ருத்ய" என்றபடி. "அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத் தொரு மூர்த்தி" என்ற ஆழ்வார் திருவாக்கை யொற்றியிறே ஆளவந்தார் அருளிச்செய்தது. நாட்டார் அக்நிபாநாதிகள் எல்லாவற்றிலும் கார்யம் உடையராய் இருப்பர். அறிவொன்றிலும் ஆய்ந்து குறைவுபட அறியாதது. சாஸ்த்ரார்த்த ஜ்ஞாநம் இல்லாமையே யன்று—அறிவில்லாமையைப் பற்றிக் குறைவும் இன்றிக்கே இருக்கும் ஸம்ஸாரிகள் படும் அனர்த்தத்தைக் கண்டு ஆற்றாமையாலும் மிக்க க்ருபையாலுமிறே பகவான் கீதோபதேசம் பண்ணினான். இவன் உபதேசத்துக்கு ஆச்ரித வ்யாமோஹமும் ஒரு காரணமாகும் "அர்ஜுனனுக்கு தூத்ய ஸாரத்யங்கள் பண்ணிற்றும் ப்ரபத்யுபதேசம் பண்ணிற்றும் இவனுக்காக" என்றிறே பிள்ளை உலகாரியன் திருவாக்கு. "மால் எங்கே" என்றருளிச்செய்தார் ஆழ்வார் அவ்விடத்து நம்பிள்ளை ஈட்டு திவ்ய ஸூக்திகள் அவச்யாநுஸந்தேயங்கள்.

"உபநிஷதம் உதாராம் உத்வமந் பாண்டவார்த்தம் |
சரண முபகதாந் நஸ்த்ராயதே சார்ங்கதந்வா|| "

என்றிறே தாத்பர்ய சந்த்ரிகா."

ஆக அகல்ஞாலத்தவரறியக் கனக்கறு நலத்தனன் அந்தமில் ஆதி அம் பகவன் உபதேசித்தது கீதா சாஸ்த்ரம் என்றதாயிற்று.

இனி கீதா ப்ரமேய ஸாரத்தை அநுபவிப்போமாக. கீதையில் இது அஸாரம், இது ஸாரம் என்று கூறவியலுமா? இயலாது. கீதையே ஸாரமாகும்.

ஸார சாஸ்த்ரமான கீதா சாஸ்த்ரத்தில் பலபல ஸாரார்த்தங்கள். அவற்றுள் ஒன்றினை அநுபவிப்போம் ஈங்கு.

"மாயன் அன்றோதிய வாக்கு" என்று திருமழிசைப் பிரானும்,

"வார்த்தையறிபவர்" என்று நம்மாழ்வாரும்,

"திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை" என்று ஆண்டாளும், "தே து சரமம் வாக்யம் ஸ்மரந்ஸாரதே" என்று ஸ்ரீ பராசரபட்டரும் அநுபவித்த வார்த்தையை ஈங்கு அநுபவிப்போம். ஸாரோத்தாரம் என்றிறே இது தன்னைப் பெரியோர் அநுபவித்துள்ளார்கள்.

"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ |
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச||"

"தர்ம ஸம்ஸ்த்தாபநம் பண்ணப் பிறந்தவன், தானே இந்த ச்லோகத்தில்

ஸர்வ தர்மங்களையும் விட்டு என்னைப் பற்று [என்கையாலே ஸாக்ஷாத் தர்மம் தானே" என்கிறது.

பரதத்துவமும் பரமப்ராப்யமுமான வன் ஸ்ரீமந் நாராயணனே என்று ஸகல வைதிக ஸம்மதம். ஆயினும் ஹிதாம் சத்திலேறே விசாரம் உள்ளது. கர்மம், ஜ்ஞானம், பக்தி, ப்ரபத்தி இத்யாதிகளாக தர்மாந்தரங்கள் பலவாருக சாஸ்த்ர ஸம்ப்ரதாய ஸித்தங்களாகையால், அதிலேயிறே நிஷ்கர்ஷம் தேவைப்படுகிறது—அதனை நிஷ்கர்ஷிக்கும் ச்லோகமே யிது: சரமச்லோகம் எனப்படுகிறது. "இனி இதுக்கு அவ்வருகில்லையென்னும் படியான சரமோபாயத்தை யருளிச் செய்கையாலே சரமச்லோகம் என்று இதுக்குப் பேராயிருக்கிறது" என்றிறே ஸ்ரீமந் லோக தேசிகன் திவ்ய ஸூக்தி-ரஹஸ்யதம உபாயத்தை ச்ரோதவ்ய சேஷமில்லாதபடி உபதேச பர்யவஸாநமாக சரமச்லோகத்தால் ஸகல லோக ரக்ஷார்த்தமாக அருளிச்செய்கிருன் கீதாசார்யன் என்றபடி.

"யே ச வேதவிதோ விப்ரா: யே ச
அத்யாத்ம விதோ ஜநா :|
தேவ தந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம்
தர்மம் ஸநாதநம் ||"

என்றும்,

"ராமோ விக்ரஹவாந் தர்ம:"

என்றுமிறே ப்ரமாண கதி இருப்பது.

ஆழ்வார் திருவாய்மொழியில் ஸ்ரீமந் நாராயணனே உபாயம் என்று முதற் பத்தாலும், அவனே ப்ராப்யன் என்று இரண்டாம் பத்தாலும், அவன் திவ்ய மங்கள விசிஷ்டன் என்று மூன்றாம் பத்தாலும் அறுதியிட்டு மேலே நான்காம் பத்தான ஒரு பத்தாலே மற்றை ப்ராப்யங்கள் ப்ராப்யாபாஸங்கள், உண்மையாக ப்ராப்யங்கள் அல்ல என்று மூதலித்து, மேலிட்டு ஆறு பத்துக்களாலே, [illegible]னைத் தவிர மற்ற உபாயங்கள் ப்ராப்[illegible] பாஸங்களே என்று மூதலிக்கிறார்.

"ஷட் பி: ஸ்வாம் பஞ்சமாத்யை: அந்தரகதிதாம் ஆசசக்ஷே முநீந்த்ர:" என்ற ஸார வாக்யம் இங்கே அநுஸந்தேயம். "ஸர்வ தர்மாம்ச்ச ஸந்த்யஜ்ய ஸர்வ காமாஞ்ச ஸாக்ஷராந்| லோகவிக்ராந்த சரணௌ சரணம் தே வ்ரஜம் விபோ||" என்றிறே புராண நிஷ்கர்ஷம்.

கீதா சரம ச்லோகமே கீதாஸாரம். அவனே ஸாக்ஷாத் தர்மம் என்பதே கீதா ஸாரார்த்தம். "உன்தன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்" என்றிறே ஆண்டாள் அறுதியிட்டது. "ஸாதநமும் சரண நெறியன்று உனக்கு" என்றிறே நாதனும் நாதனுமான ஸ்ரீ பார்த்தஸாரதி கீதாசார்யன் அர்ஜுநனுக்கு அறுதியிட்டான்.

சரமச்லோகத்தில் பூர்வார்த்தத்தில் "மாம்" என்று தன்னுடைய ஸௌலப்யத்தை வெளியிட்டான். இது ஆச்ரயண ஸௌகர்யாபாதகமான குணமாகும். "வ்ரஜ" என்று ஆச்ரயண விதாயகமிறே பூர்வார்த்தம்.

நம்மாழ்வாரும் "கடிசேர் துழாய் முடிக் கண்ணன் கழல்கள் நினைமினோ" (4.1 3) என்று "மாம்" இன் அர்த்தத்தை யருளிச்செய்தார்.

சரமச்லோகத்தில் உத்தரார்த்தத்தில் "அஹம்" என்று தன்னுடைய பரத்வத்தை வெளியிட்டான். இது ஆச்ரித கார்யாபாதகமான குணமாகும். "மோக்ஷயிஷ்யாமி" என்றிறே மேலில் வார்த்தை. அவனுக்கு எளிமையில்லையேல் அவனை ஆச்ரயிக்க முடியாது. அவனுக்கு மேன்மையில்லையேல் நம் கார்யம் அவன் செய்து தலைக்கட்டவியலாது. [illegible]

ஞனிறே ஆச்ரயணீயன். சக்தனிறே கார்யகரன், ஸமர்த்த காருணிக விஷயமிறே பகவத் விஷயம்.

தேர்மன்னர்க்காய் அன்று தேரூர்ந்தானிலும், தார்மன்னர் தங்கள் தலைமேலானிறே. இதிலே பராவர ஸப்தார்த்தம். "கையும் உழவு கோலும், பிடித்த சிறுவாய்க் கயிறும், ஸேனா தூளி தூஸரிதமான திருக்குழலும், தேருக்குக்கீழே நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸாரதியான தான்" என்றான். "மாம்" என்று நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்த இவனை "சரணம்" என்றதே கொண்டு நித்ய ஸூரி பரிஷத்துக்கு ஆளாக்குகிற ஸர்வ சக்தித்வத்தை "அஹம்" என்று காட்டுகிறான் என்பர் நம்பெரியோர். "சேயன் மிகப் பெரியன் அணியன் சிறியன் மாயன்" என்றாரிறே திருமழிசைப்பிரானும். "மாம்" என்ற ஸௌலப்யமும், "அஹம்" என்ற பரத்வமும் ஸ்ரீமத்வத்தாலே யாகிறது. ஆகையால் "மாம்" என்கிறவிடத்தில் ஸ்ரீமானே கூறப்பட்டான் என்பர் பெரியோர்.

"மாதவ : பக்தவத்ஸல :" என்றும், "ஸ்ரீகர்ப : பரமேச்வர :" என்றும் பரத்வ ஸௌலப்ய நிதானம் ஸ்ரீமத்வம் என்று காட்டப்பட்டது.

"திருவுடையடிகள்", "திருமகளார் தனிக்கேள்வன்", "பெருமையுடைய பிரான்" என்று ஸ்வாமித்வமும், "கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பேயோ", "திருவின் மணாளன் என்னுடைச் சூழலுளானே" என்று ஸௌலப்யமும், அவற்றின் அடியான ஸ்ரீய : பதித்வமும் கூறப்பட்டதிறே—ஆக, சரமச்லோகத்தில் கூறப்பட்ட பகவான் ஸ்ரீமந் நாராயணனே — "ஏஷநாராயண : ஸ்ரீமான் ஆகதோ மதுராம் புரீம்" என்று நின்றதிறே.

உத்தரார்த்தத்தில் "அஹம்" என்று குறைவு ஒன்றுமில்லாத கோவிந்தனை தன்னையும் "த்வா" என்று அறிவு ஒன்றுமில்லாத இவனையும் நிர்தேசித்தால் ஒரு மேட்டுக்கு ஒரு பள்ளம் நேராமிறே.

"குணாதுங்கதயா தவ ரங்கபதே ப்ருசம் நிம்நமிமம் ஜநம் உந்நமய" என்றருளிச் செய்தார். ஸ்ரீ பராசரபட்டர் "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்ற பிறகு "மாம்" என்றான். அது தர்ம நிவர்த்தக வேஷம். ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றதற்கு முன்னே "அஹம்" என்றான். இது அதர்ம நிவர்த்தகமான வேஷம். "மாம்" என்று இவன் கால் தன் தலையில் படும்படி கூறினான். "அஹம்" என்று தன் கால் அவன் தலையில் படும்படி கூறுகிறான்.

"மாம்" என்று கையும் உழவுகோலுமான வேஷம்.

"அஹம்" என்று கையும் திருவாழியாழுமான வேஷம்.

"எப்போதும் கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவானிறே. பாப நிவ்ருத்தியான விரோதி நிவ்ருத்தி சொன்னது இஷ்ட ப்ராப்திக்கும் உபலக்ஷணம் என்று சொல்லுவார்கள். அநிஷ்டம் தொலைந்தவாறே ஸேது பந்தஸ்ரோத : ப்ரஸ்ருதி ந்யாயத்தாலே இஷ்டப்ராப்தி தன்னடையாம் என்றும் கூறுவர். ப்ரபந்நனுக்கு பாப நிவ்ருத்தியில் பக்தனைக் காட்டிலும் ஏற்றம் உள்ளதாகையால் அது தனித்துக் கூறப்பட்டது என்றும் சொல்லுவர்- பக்தி ப்ராரப்த வ்யதிரிக்தாக நாசிநீ ப்ரபத்தி ப்ராரப்த ஸ்யாபி நாசிநீ என்றிறே சாஸ்த்ர நிஷ்கர்ஷமிருப்பது.

"முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார், எத்தினால் இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே" என்று இவ்வளவில் கூறப்பட்டது.

இதுவே கீதாஸாரம்.

கீதாசார்யனும் ஸ்ரீ பார்த்தஸாரதி திருவுள்ளம் உகக்கும்படியாகத் தொன்று தொட்டு அருளிச்செயல் சேவை கோஷ்டியை நடத்திவரும் இந்த ஸபை வர்த்ததாம் அபிவர்த்ததாம் ஸ்ரீ பார்த்தஸாரதி நிரவதிக அநுக்ரஹ விசேஷணம் என்று மங்களாஸாஸனம் செய்து அமைகிறேன்.